உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும்
சிதம்பரம் இராமலிங்கப்பிள்ளை அவர்கள்
திருவாய்மலர்ந்தருளிய

# பத்திமாலையும்

கீர்த்தனையும்.

இஃது

சிதம்பரம்.

பு. வே. சுந்தரம்பிள்ளை கேட்டுக்கொண்டபடி.

இவை

சரவணபுரம்
சண்முகமுதலியாரவர்களால்
பார்வையிடப்பட்டு
புரசைபாக்கம்.
ஏழுமலைப்பிள்ளையவர்களது
விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப் பட்டது.
விக்குருதி௵.

எட்டாம் புத்தகம்.

திருச்சிற்றம்பலம்.

# பத்திமாலை

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அருளுடையா யடியேனை யருமையறிந்தே யறியாதே மறுத்தபிழை யத்தனையும் பொறுத்து மருளுடையேன்றனை யழைத்துத் திரும்பவுமென் கரத்தே மகிழ்ந்தளித்த பெருங் கருணை வண்ண மென்றன் மனமுந் தெருளுடையகண்களும் விட்டகலாதே யின்னுந் தெரிகின்ற தாயினு மென் சிந்தை யுருகிலதே, யிருளுடைய சிலையுமிகற் குருகலரிதலவே யினித்தநடம் புரிந்து மன்றிற் றனித்தசிவக்கொழுந்தே. (௧)

அன்புடையா யடியேனுளருமையறிந்தே யறியாதே மறுத்தபிழையத்தனையும் பொறுத்து, வன்புடையேன் றனையழைத்துத் திரும்பவு மென்கரத்தே வலிந்தளித்த பெருங்கருணை வண்ண மென்றன்னனமும், மின்புடையகண்களும் விட்டகலாதேயினும் விளங்குகின்ற தாயினுமென் வெய்யமனமுருகா, வென்புடையவுடலுமிகற் குருகலரிதலவே யினித்தநடம்புரிந்து மன்றிற்றனித்தசிவக்கொழுந்தே. (௨)

ஆளுடையாய் சிறியேனை யருமையறிந்தே யறியாதே மறுத்தபிழையத்தனையும் பொறுத்து, வாளுடை

யென்றனையழைத்துத்திரும்பவுமென்காதேவலிந்தளி
த்தபெருங்கருணைவண்ணமென்றன்மனமு,நீருடையக
ண்களும்விட்டகலாதேயின்னு நிகழ்கின்ற தாயினுமெ
னெஞ்சமுருகிலதே, எனுடைய மலையுமிதற்குருகல
ரிதலவேயினித்தடம்புரிந்துமன்றிற்றனித்தசிவக்கொ
ழுந்தே. (௩)

ஆரமுதேயடியேனுனருளருமையறியேனறியாதே
மறுத்தபிழையத்தனையும்பொறுத்து, வாரமுறவெனைய
ழைத்துத்திரும்பவுமென்காதேமகிழ்ந்தளித்தபெருங்
கருணை வண்ணமென்றன்மனமுன், சீருடையகண்களு
மவிட்டகலாதேயின்னுந்தெரிகின்றதாயினுமென் சிந்
தையுருகிலதே, யீரமிலாமாமுமிதற்குருகலரிதலவே யி
னித்தடம்புரிந்துமன்றிற்றனித்தசிவக்கொழுந்தே ( )

அற்புதநின்னருளருமை யறியேனன் சிறிதுமறி
யாதேயழுக்கபிழையாயிரமும்பொறுத்து, வற்புறவே
ன்றனையழைத்துத்திரும்பவுமென்காதே வலிந்தளித்
தபெருங்கருணைவண்ணமென்றன்மனமுங், கற்புடைய
கண்களும்விட்டகலாதேயின்னுங்காண்கின்ற தென்னி
னுமென்கன்மனமோவுருகா, விற்புடைய விரும்புமிதற்
குருகலரிதலவேயினித்தடம்புரிந்துமன்றிற்றனித்தசி
வக்கொழுந்தே. (௫)

ஆண்டவ நின்னருளருமை யறியாதே திரிந்தேனைன் றிரவின்மறாக்குபிழை யத்தனையும்பொறுத்து, வேண்டு காணையருகழைத்துத் திருப்பவுமென்காத்தே தமிகவளிக்கு வருள்வண்ணம் வினவுடையேன்மனமுங் காண்டகைய கண்களுங் கிட்டகலாதேதயின்னுங்காண்கின்ற தாயினு மென்கருத்துருகக்காணே, வீண்டுகாக்கரடி யிதற் குருகலிதலைவ யினித்தாடம் புரிந்துமன்றிற்றனித்து மெய்க்கொழுந்தே. (௬)

அரசே நின்றிருவருளினருமையொன்றுமறியேனை யறியாதே மறக்குபிழையத்தனையும்பொறுத்து, விரவும ஸ்பிரிவிணையழைத்துவவியவுமென்காத்தே வியந்தளித்த பெருங்கருணை விளக்கமென்றன்மனமும், மூரவுமலர்க்க ண்களுங் கிட்டகலாதேதயின்னுமொளிர்கின்ற தாயினு மென்னுள்ளமுருகிலதே, யிரவுநிறத்தவருமிதற்குருகல ரிதலைவேயினித்ததடம்புரிந்துமன்றிற்றனித்துமெய்க்கொ ழுந்தே. (௭)

ஐயா நின்னருட்பெருமை யருமையொன்றுமறியே னறியாதேதடறுக்குபிழையத்தனையும்பொறுத்து, மெய்ய வன்றென்னை யழைத்துவளியவுமென்காத்தே வியந்தளித் தபெருங் கருணைவிளக்கமென்றன் மனமுங், கையாலுக

ண்களும்விட் டகலாதயின்னுங்காண்கின்ற தாயினுமெ
ன்கருத்துருகக்காணே, னெய்யாவன்பாலுமிதற்குருகல
ரிதலைவெயினித்தநடம் புரிந்துமன்றிற்றனித்த சிவக்
கொழுந்தே. (௮)

அப்பாநின்றிருவருட்பே ரருமையறியேனன்
றிரவினைமறுத்தபிழையத்தனையும்பொறுத்து, விப்பாரி
லெனையழைத்து வலியவுமென்காத்தேயினிதளித்தபெ
ருங்கருணையின்பமென்றன்மனமூழ்க, தப்பாயகண்களும்
விட்டகலாதேயின்னுந்தோன்றுகின்ற தாயினுமித்தட்
ட நெஞ்சமுருகா, வெப்பாவிநெஞ்சமிதற்குருகலரிதலை
வெயினித்தநடப்புரிந்துமன்றிற்றனித்தசிவக்கொழுந்

அம்மாநின்னருட்சத்தி யருமையொன்றுமறியே
னென்றிரவின் மறுக்கபிழையத்தனையும்பொறுத்து, வெ
ம்மாயைகற்றியெனையருகழைத்தென்காத்தேயிவெளி
த்தபெருங்கருணைவிளக்கமென்றன்மனமூழ், மைம்மா
விழிகளுக்கிட் டகலாதேயின்னும்வதிகின்ற தாயினு
மெனைவஞ்சநெஞ்சமுருகா, வெம்மாயநெஞ்சமிதற்குரு
கலரிதலைவெயினித்தநடப்புரிந்துமன்றிற்றனித்தசிவக்
கொழுந்தே. (௯)

பத்திமாலை-முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

கீர்த்தனை - இ-ம்- தோடி - ஆதிதாளம்.

பல்லவி.

தெண்டனிட்டேனென்றுசொல்லடிசுவாமிக்குநான்
தெண்டனிட்டேனென்றுசொல்லடி.

அநுபல்லவி.

தண்டலைவிளங்குந்தில்லைத் தலத்திற்பொன் னம்பலத்
தே, கண்டவர்மயங்கவேடங்கட்டியாடுகின்றவர்க்கு
தெண்ட

சரணங்கள்.

கற்பூரவாசம்வீசும்பொற்பார்திருமுகத்தே
கனிந்தபுன்னகையாடக்கருணைக்கடைக்கணாட
அற்பார்பொன்னம்பலத்தேயாநந்தத்தாண்டவ
மாடிக்கொண்டேயென்னையாட்டங்கண்டாருக்கு
தெண்ட

இழிந்த இம்மைப் பையிற் கேற்றுவாரொன்றடைந்தால்
ஏற்றுவார்போலேயின்னு மிழியவைப்பாருக்குப்
பழுத்தநழுவிமெள்ளப்பாலில்விழுந்ததென்னப்
பசப்பிப்பசப்பியன்பர்பண்டம்பறிப்பவர்க்கு
தெண்ட

சுட்டதிருநீறுபூசித்தொந்தோமென்றாடுவார்க்குத்
தோன்றுதலைமாலையணிதோள்விளங்கவருவார்க்குப்
பிட்டுக்காசைப்பட்டுமாறன்பிரம்படிபட்டவர்க்குப்
பிள்ளைக்கறிக்காசைகொண்ட கள்ளத்தவவேடருக்கு
தெண்ட

வாழ்ந்தாரைமேன்மேலும்வாழச்செய்பவருக்கு
மாசுபறித்தவர்கையிற்சாசுபறிக்கின்றவர்க்குத்
தாழ்ந்தாரையடிக்கடிதாழக்காண்பவருக்குத்
தாளைகிளைகித்தனியேநின்றவருக்கு
தெண்ட
ஆதியந்தநடுவில்லாவானந்தநாடருக்கு
அண்டருயிர்காத்தமணிகண்டச்சிகண்டருக்குச்
சோதிமயமாய்விளங்குந்தூயவடிவாளருக்குக்
தொண்டர்குடிகெடுக்கவேதுஜங்கட்டிக் கொண்டவர்
க்கு
தெண்ட
பாட்டுக்காசைபட்டுமுன்னம்பாவைதன் வாயிலிற்போ
ய்ப்பண்புரைத்ததூதனென்றேபட்டங்கட்டிக்கொ
ண்டவர்க்கு, வீட்டுக்காசைப்படுவாரை வீட்டைவிட்டு
த்துரத்தியே வேட்டாண்டியாயுலகிலோட்டாண்டியாக்
குவார்க்கு.
தெண்ட
தாம்வயிற்றிற்பிறவாதுதானேமுளைத்தவர்க்குச்
சாதிகுலமறியாது தாண்டவஞ்செய்கின்றவர்க்கு
ஏயதொழிலருளுமென்பிராணநாயகர்க்கு
ஏமாந்தவரையெல்லாமேமாத்துமீசருக்கு
தெண்டனிட்டேனென்றுசொல்லடிசுவாமிக்குநான்
தெண்டனிட்டேனென்றுசொல்லடி

திருச்சிற்றம்பலம்.

*